1513 9591/2019

தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர் : திருமதி க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,
தொழில்நுட்பக் கல்வி இயக்குநர்

---

E1

Govt. Polytechnic College
23 AUG 2021
Vanavasi-636 457.

**செயல்முறை ஆணை எண்.6398/டி3/2020, நாள். 12.08.2021.**

பொருள் : நிர்வாகம் - தொழில் நுட்பக் கல்வித் துறை – தொழில்நுட்பக் கல்வி கோட்டம், கோவை – (லேட்) திரு.நா.சின்னதம்பி, பிட்டரின் வாரிசுதாரர்(மகன்) திரு.சி.சுரேஷ்குமார், என்பவருக்கு வனவாசி, அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் வழங்கியது - பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்குதல்.

பார்வை:
1. இயக்குநர் அவர்களின் பணி நியமன செயல்முறை ஆணை எண். 6456/டி3/2012, நாள். 22.08.2019
2. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ1) துறை நாள் 26.02.2021
3. அரசு கடித எண்.4241/சி2/2021-1, உயர்கல்வி (சி2) துறை, நாள் 24.03.2021

-----

பார்வை (1)-ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி, இத்துறையில் இளநிலை உதவியாளராக கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்ட திரு.சி.சுரேஷ்குமார், என்பவர் 28.08.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து, சேலம், வனவாசி, அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் பணிபுரிந்து வருகிறார்.

பார்வை (2) மற்றும் (3)-ல் காணும் அரசாணை மற்றும் அரசு கடிதத்தில் வரையறுக்கப்பட்ட வழிமுறைகளின் அடிப்படையில், திரு.சி.சுரேஷ்குமார், இளநிலை உதவியாளருக்கு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 சட்டப்பிரிவு 28 (1)-ன்கீழ், அவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 28.08.2019 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி ஆணைகள் வழங்கப்படுகின்றன.

இவர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை ஏதும் இருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதி உடையவராகிறார். இரண்டாம் ஆண்டு ஊதிய உயர்வு பவானிசாகர் பயிற்சியினை நிறைவு செய்த பின்னர் வழங்கப்பட வேண்டும்.

தனியர், பணியில் சேர்ந்த நாள் முதல், மூன்றாண்டு பணிகாலத்திற்குள் இரண்டாண்டுகள் தகுதிகாண்பருவத்தை நிறைவு செய்ய வேண்டும். மேலும், தகுதிகாண்பருவகாலத்திற்குள் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியில் கட்டாயம் தேர்ச்சி பெற வேண்டும்.

ஒம்/- க.லட்சுமி பிரியா
தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்

பெறுநர்,
திரு.சி.சுரேஷ்குமார்,
இளநிலை உதவியாளர்,
அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி,
வனவாசி, சேலம் (முதல்வர் வழியாக)

நகல்: முதல்வர்,
அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி,
வனவாசி, சேலம்
: தொகுப்பு கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

17/8/2021

உதவி இயக்குநர் (நிர்வாகம்)